தயாரிப்பு : திரு. S. வசந்தமூர்த்தி
இ/ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்


**தேர்ச்சி 7.0 :** பணம் மற்றும் விலை மட்டங்களின் நடத்தையை இனங்கண்டு பொருளாதாரத்தின் செயற்பாட்டுக்கு வங்கியமைப்பு பங்களிக்கும் விதத்தினை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.3 :** பண நிரம்பலை விரிவான அடிப்படையில் முன்வைப்பார்.

---

**பணநிரம்பல் -** குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியில் பொதுமக்களிடையே புழக்கத்தில் இருக்கின்ற மொத்தப் பணத்தொகையாகும். இது நிதிக்கூட்டு எனவும் அழைக்கப்படும்.

இலங்கையில் பண நிரம்பல் வரைவிலக்கணப்படுத்தும் விதம்

- ஒடுங்கிய பண நிரம்பல் ($M_1$)
- விரிந்த பண நிரம்பல் ($M_2$)
- ஒன்றிணைக்கப்பட்ட பண நிரம்பல் ($M_2b$)
- விரிந்த பண நிரம்பல் ($M_4$)




**ஒடுங்கிய பண நிரம்பல் - $M_1 = C_P + DD_P$**

$C_P$ = பொதுமக்களிடமுள்ள சட்டமுறைப் பணம்
$DD_P$ = பொதுமக்கள் பெயரில் வணிக வங்கிகளில் உள்ள கேள்வி வைப்புக்கள்

**விரிந்த பண நிரம்பல் - $M_2 = M_1 + TSD_P$**

$M_1$ = ஒடுங்கிய பண நிரம்பல்
$TSD_P$ = பொதுமக்கள் பெயரில் வணிக வங்கிகளில் உள்ள தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள்

**ஒன்றிணைக்கப்பட்ட பண நிரம்பல் - $M_2b = M_2 + TSD_{NRFC} + RD_{FCBU}$**

$M_2$ = விரிந்த பண நிரம்பல்
$TSD_{NRFC}$ = வதியாதோர் வெளிநாட்டுச் சட்டமுறைப் பணக் கணக்குகளில் உள்ள தவணை சேமிப்பு வைப்புக்கள் 50%
$RD_{FCBU}$ = வெளிநாட்டுச் சட்டமுறைப் பண வங்கி அலகுகளிலுள்ள வதிவோருக்குரிய தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள்

**விரிந்த பண நிரம்பல் - $M_4 = M_2b + LSB + RFC$**

$M_2b$ = ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பணநிரம்பல்
LSB = அனுமதிப்பத்திரம் பெற்ற விசேட வங்கிகளில் உள்ள பொதுமக்களுக்குரிய சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்கள்
RFC = பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளில் உள்ள பொதுமக்களுக்குரிய சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்கள்

**பயிற்சிகள் :**

01. M2 வைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை?
02. உயர்வலுப் பணத்தை தீர்மானிக்கும் காரணிகள் எவை?
03. பின்வருவன மத்திய வங்கியின் சொத்தா அல்லது பொறுப்பா எனக் குறிப்பிடுக.
    - கேள்வி வைப்பு
    - மத்திய வங்கியிடமுள்ள வைப்பு
    - வெளிநாட்டிலிருந்து பெறப்படும் கடன்
04. பணவாக்கத்தை தீர்மானிக்கும் காரணிகள் எவை?